# வண்ண வண்ணப் பூக்கள்

## சிறுவர் பாடல்கள்



- ஷெல்லிதாசன் -

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ண வண்ணப் பூக்கள்

(சிறுவர் பாடல்கள்)

அன்புடன் ஷெல்லிதாசன்
11/11/2013

**- ஷெல்லிதாசன் -**

மகுடம்

இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் - வண்ண வண்ணப் பூக்கள் (சிறுவர் பாடல்கள்)
ஆசிரியர் - ஷெல்லிதாசன்
முகவரி - B-5, அரச விடுதி, உப்புவெளி, திருகோணமலை.
தொலைபேசி : 026 4900648
பதிப்புரிமை - பாலதேவி கனகரெத்தினம்
முதற்பதிப்பு - ஆகஸ்ட் - 2015
வெளியீடு - மகுடம் பதிப்பகம்
ஓவியங்கள் - கோ. கைலாசநாதன்
வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு - வணசிங்கா பிரிண்டர்ஸ்
பக்கங்கள் - xviii+42 =60
விலை - 200/=

ISBN - 978-955-52563-1-5

Book - Vanna Vanna Pokkal
Author - P. Kanagaratnam (Shelli Thasan)
Publisher - Magudam Publication's
Art - K.Kailasanathan
Address - B-5, Govt. Family Quarters,Uppuveli, Trincomale
Telephone : 026 4900648
Copyright © - Mrs. Baladevi Kanagaratnam
First edition - August 2015
Layout, Printing - Wanasinghe Printers
Pages - xviii+42 =60
Price - 200/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்நூல்...**

**ஓர் இளம் வானம் பாடியாய்**
**வலம் வந்து**
**ஒரு வானவில்லாய்**
**மறைந்துவிட்ட**
**இசை இளவரசன்**



மட் / கல்லடி

## வரதராஜன் இளஞ்செழியன்

அவர்களுக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் வெளியீட்டகத்தின் சார்பில் கவிஞர் ஷெல்லிதாசனின் **'வண்ண வண்ணப் பூக்களை'** வெளியிடுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

அண்மைக் காலமாக சிறுவர்கள் தொடர்பான ஆக்க இலக்கிய முயற்சிகளும், அவர்களது உளவியல் மேம்பாடு தொடர்பான பல செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதற்கு மேலும் அணிசேர்க்கும் முகமாக இந்த சிறுவர் பாடல் தொகுப்பு வெளிவருவது கவனிப்புக்குரியதாகிறது.

சிறுவர்களின் உலகம் என்பது தனித்துவமானது. அது பொய்களற்ற, போட்டி, பொறாமைகளற்ற, தனித்துவமான உலகம். இன்று உலகெங்கும் சிறுவர் தொடர்பாகவும், அவர்களது ஆற்றல் மேம்பாடு தொடர்பாகவும் பல ஆக்கபூர்வமான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

எமது நாட்டினைப் பொறுத்தவரை வெறுமனே ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையுடன் மட்டுமே எமது சிறுவர்களின் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது. வெறுமனே புத்தக பூச்சிகளாக நாம் அவர்களை மாற்றிக்கொண்டிருக்கிறோம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல எமது ஒட்டு மொத்த கல்வி முறையையே இன்று கேள்விக்குள்ளாக்க வேண்டிய நிலையை தோற்றுவித்துள்ளது.

இந்த நிலையில் ஓரளவுக்கேனும் அவர்களது உளவியல் சார்ந்த ஆளுமை விருத்தியில் முக்கிய பங்காற்றுபவை இவ்வகையான இலக்கிய முயற்சிகளே. அந்த வகையில் நாடறிந்த கவிஞரான ஷெல்லிதாசன் அவர்கள் இந்த வண்ண வண்ணப் பூக்கள் என்ற சிறுவர் பாடல் தொகுப்பின் மூலம் சிறுவர் உலகிற்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

தனது பாடல்கள் மூலம் சிறுவர்களின் உலகிற்கு எம்மையும் அழைத்துச் சென்று சிறுவர்களுடன் சிறுவர்களாக எம்மையும் மாற்றிவிடும் ரசவாதவித்தையை அவர் புரிந்துள்ளார். இது அவரது கவி ஆளுமையின் வெளிப்பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் சிறுவர் இலக்கிய முயற்சிகள் குறிப்பாக சிறுவர் பாடல் முன்னோடிச் செயற்பாடுகள் ஈழத்திலேயே கால்கோளிட்டது என்பது வரலாறு. சிறுவர்களுக்கென தனியான இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்தவர்கள் என்ற வகையில் ஈழத்துப் படைப்பாளர்களுக்கு மிக முக்கிய இடம் உண்டு. அதன் நீட்சியாக இன்று தன்னையும் ஒரு சிறுவர் இலக்கிய படைப்பாளியாக அடையாளப்படுத்தியிருக்கும் கவிஞர் ஷெல்லிதாசனின் மூன்றாவது வெளியீட்டு முயற்சி இது.

அவரது முதலாவது தொகுதியான **செம்மாதுளம்பூ** 2010ல் வெளியாகி கிழக்கு மாகாண விருதினை பெற்றது. 2013ல் ஜீவநதி வெளயீடாக வெளிவந்த **"நகர வீதிகளில் நதிப்பிரவாகம்"** என்ற கவிதைத் தொகுப்பின் தலைப்புக் கவிதை **மகுடம்** கலை இலக்கிய காலாண்டு இதழின் முதலாவது இதழில் வெளிவந்தது. இன்று அவரது மூன்றாவது வெளியீடு சிறுவர் பாடல் தொகுப்பாக மகுடத்தின் ஏழாவது வெளியீடாக வெளிவருவது குறிப்பிடத்தக்கது

கவிஞர் ஷெல்லிதாசன் வெறுமனே தனி மன உணர்வுகளை மட்டும் பாடுபவர் அல்ல. தனிமனித உணர்வுகளுக்கு ஊடாக சமூகப் பிரச்சனைகளை படம் பிடித்து காட்டுபவர். அதன் தொடர்ச்சியாக இன்று இந்த சிறுவர் பாடல்கள் மூலம் சிறுவர்கள் தொடர்பான பிரச்சனைகளையும் வெகு அழகாக எமக்கு எடுத்துக் காட்டுகிறார். அந்தவகையில் இந்த சிறுவர் பாடல்கள் சிறுவர் பிரச்சனைகளை வெளிக்கொணரும் பாடல்களாகவும் அமைந்துள்ளது. குறிப்படத்தக்கதாகும்

கவிஞர் ஷெல்லிதாசன் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்க வாழ்த்துகிறேன்

**வி. மைக்கல் கொலின்**
(ஆசிரியர் - மகுடம்)
தொ.பே. இல. 0774338878



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயவுரை

**த**மிழில் சிறுவர் பாடல் சார்ந்த முன்னோடி முயற்சிகள் ஈழத்திலேயே நடைபெற்றுள்ளன என்பது வரலாறாகிவிட்டது. ஈழத்தின் முதல் சிறுவர் பாடல் தொகுப்பு 1918ஆம் ஆண்டளவில் வெளிவந்ததாக அறியப்படுகின்றது. சிறுவர் பாடல் போட்டி முதன்முதலாக நடாத்தப் பட்டதும் ஈழத்திலே தான். சிறுவர் பாடல்கள் வயது அடிப்படையில் தொகுக்கப்பட்டிருப்பதும் சோமசுந்தரப்புலவர், பீதாம்பரம் முதலானோர் வெளியுலகிற்கு தெரியவந்ததும் அப்போட்டியினூடாகவே தான். அக்காலந்தொட்டு இன்றுவரை சிறுவர் பாடல் தொகுப்புகள் இடையறாது வெளிவந்து கொண்டிருக்கிற நிலையில் இவரது சிறுவர் பாடல்கள் இத்துறையை எவ்வளவு தூரம் வளப்படுத்தகின்றன என்றொரு கேள்வி எழுகின்றது!

ஈழத்துச் சிறுவர் பாடல்கள் குறிப்பிட்ட வாய்ப்பாட்டினுள் அடங்கி விடுகின்றன என்றொரு குறைபாடுண்டு, மாறாக இத்தொகுப்பிலுள்ள பாடல்கள் அக்குறைபாட்டிலிருந்து ஓரளவு விலகி நிற்பதை அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக தமிழ்பேசும் மக்களது மத்திய கிழக்கிற்கான புலப்பெயர்வினால் இங்கு ஏற்படும் சமூக பண்பாட்டுச் சீரழிவுகள் அளப்பரியன. எனினும் படைப்பாளிகள் இவ்விடயம்பற்றி அக்கறை கொள்வதரிது. இவ்விதத்தில் இத் தொகுப்பிலிடம்பெற்றுள்ள பின்வரும் பாடல் குறிப்பிடத்தக்கது.

### எல்லாமே நீ தான் அம்மா

அரபு நாடு போக வேண்டாம்
எங்கள் அம்மா - நீங்கள்
அருகில் நித்தம் இருக்கவேண்டும்
அம்மா அம்மா.

வெளி நாடுபோக வேண்டாம்
எங்கள் அம்மா - நீங்கள்
வீட்டில் எம்மோ டிருக்கவேண்டும்
அம்மா அம்மா.
அநாதை களாய் போய் விடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அம்மா - உங்கள்
ஆதரவு இல்லை யெனில்
அம்மா அம்மா.

கல்வி யெல்லாம் பாழாகும்
எங்கள் அம்மா - நீங்கள்
கவனியாது பறந்து சென்றால்
அம்மா அம்மா.

பணமிருந்தால் நல்லது தான்
எங்கள் அம்மா - அது
பாசம் அன்பை பொழிந்திடுமோ
அம்மா அம்மா

மேற்கூறியவாறான புறப்பிரச்சினைகள் பற்றி மட்டுமன்றி, சிறுவர்கள் சார்ந்த அகப்பிரச்சினைகள் பற்றியும் கவிஞர் கவனம் செலுத்தியுள்ளார். இன்றுள்ள சிறுவர்கள் பலர் வயதுக்கு மீறிய உடல் வளர்ச்சி உடற்பருமன் பெற்றிருப்பது கண்கூடு. பெற்றோரும் சரி மற்றோரும் சரி இப்பிரச்சினை பற்றி அலட்டிக்கொள்வதில்லை. கவிஞர் அதுபற்றிப் பேசுகின்றார்.

**ஓடிவிளையாடு தம்பி**

கூட்டுக்குள்ளே போட்டு வளர்த்த
கோழி குஞ்சு போல - நீ
குண்டு குண்டாய் வளருவது
என்று மாறும் தம்பி?

ஓடியாடி விளையாடும்
காலம் மாறிப் போச்சு - நீ
உட்கார்ந்து பொழுது போக்கி
உடம்பு குண்டாய் ஆச்சு

கண்ட கண்ட தீனையுண்டு
தண்ணித் தவளை போலே - நீ
களைப்புடனே நடந்து செல்லும்
காலம் மாற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தடித்து பாய்ந்து ஓடி
நித்தம் விளையாடு - உன்
படிப்புடனே தேகம் நன்கு
பலம் பெறவும் வேண்டும்.

உறுதியான சுவரினிலே
சித்திரமும் வரைவோம்
உடலை நன்கு பராமரித்து
உலகம் போற்ற வாழ்வோம்.

போதனை அல்லது பிரச்சாரம் வெளிப்படையாக இடம்பெறுவது ஈழத்துச் சிறுவர் பாடல்களில் காணப்படும் பிறிதொரு குறைபாடு. இக்குறை பாட்டினை போக்குவதற்கு சில உத்திகளை கையாள்கின்றார் இக்கவிஞர். படர்க்கை நிலையில் ஏவல் முறையில் போதனை செய்யாமல் சிறுகதை போன்று பாத்திரக்கூற்றாகவும் தன்மை நிலையிலும் தனது கருத்துக்களை முன் வைப்பதும் அத்தகைய உத்திகளுள் முக்கியமானது. பல பாடல்களில் இவ்வுத்தி இடம்பெறுகின்றது. உ+ம்.

**பலூன் சிறுவன் பாடல்**

கடற்கரையில் பலூன் விற்கும்
சிறுவன் நானுங்கோ
கவலை எனக்கு நிறையவுண்டு
சொல்றேன் கேளுங்கோ!

பள்ளி செல்ல நான்நினைத்தும்
போக முடியல்லே
படிக்க நானும் ஆசைப்பட்டும்
பலனும் கிடைக்கல்லே!

குடித்துவிட்டு எங்களப்பா
ஊரைச் சுற்றுறார்
குடிக்கக் காசு வேணுமென்று
என்னை அடிக்கிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி தங்கை இருவருக்கும்
நானே மூத்தவன்
நம்பி எனது உழைப்பினாலே
அவர்கள் வாழுறார்.

அம்மா பாவம் அப்பாவிடம்
அடியை வாங்கியே
அகலாத நோயில் வீழ்ந்து
பாயிற் கிடக்கிறாள்!

என்ன செய்ய பலூன் விற்றே
எங்கள் சீவியம்
இரண்டு மூன்று பலூனாய் வாங்கி
உதவி செய்யுங்கோ - ஐயா
உதவி செய்யுங்கோ!

மேலும் பழைய பொருள், கவிஞரிடம் புதிய பார்வையில் வெளிப்படுவது பற்றியும் அதனால் நாம் புதியசுவையை அனுபவிப்பது பற்றியும் இவ்வேளை எடுத்துரைப்பது அவசியமானது. உதாரணத்திற்கு பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

**தன்னை நம்பும் சின்னக் குருவி**

சின்னச் சின்ன குருவியைப் பார் - அது
சிறகு அடிக்கும் அழகினைப்பார்
அங்கும் இங்கும் அது பறந்து
அரிய கதைகள் கூறுது பார்.

மரத்திற் பறந்து அது இருக்கும்
மண்ணில் வந்து இரைதேடும்
கணத்தில் காற்றாய் மேலெழுந்து
காணாத் தொலைவில் அது பறக்கும்.

தனது உணவைத் தான் தேடும்
தன்னை நம்பி அதுவாழும்
எவரும் தருவார் என நம்பி
இருக்கா தந்தச் சிறு சிட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் அது போல் சுறுசுறுப்பாய்
நம்மை நம்பி வாழ்ந்திடுவோம்
வானில் பறக்கும் குருவியைப் போல்
வலமும் வருவோம் பூமியிலே!

சில உள்ளடக்கம், ஒன்றிக்கு மேற்பட்ட பாடல்களில் வெளிப் படுவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். உதாரணமாக, கல்வி கற்றல் முதலியன, மாண்பு தரும் கல்வி, தாய்மொழிக்கல்வி, மகத்துவமானது வாசிப்பு, பள்ளிப்பருவம். பல பாடல்களிலே பேசப்படுகின்றது. ஆனால் அவற்றை உற்று நோக்குவீர்களாயின் பன்முகப்பார்வைகளாக வெளிப்படுவதை அவதானிப்பீர்கள்.

இத்தொகுப்பிலுள்ள பாடல்கள் ஏற்படுத்தும் மற்றொரு சுவைப்பு, முன்னைய கவிஞர்கள் பாடிய சில விடயங்கள் இன்றைய காலச் சூழலோடு தொடர்பு படுத்தி பார்க்கப்படுவதனால் ஏற்படுகின்றது.

**தங்கத் தாத்தா அழைக்கிறார்.**

ஆடிக்கூழ் குடிக்க
ஆசையாக இருக்குது
அப்பப்பா பனாங்கட்டி விலை
ஆளை முழுங்க வருகுது.

கூடிக் கூழ் குடிக்க
தங்கத் தாத்தா அழைக்கிறார்
கூழ் குடித்தால் கேவலமாம்
இங்கு சிலர் பழிக்கிறார்!

அம்மாக்கள் சில பேர்க்கு
ஆடிக் கூழைத் தெரியல்லே
அதைச் செய்யும் விதம்கூட
அவர்களுக்கு புரியல்லே!

அழகாக 'கேக்' செய்ய
தெரிந்த அம்மா. எங்களின்
ஆடிக் கூழை. பாரம்பரிய
உணவுகளை மறந்ததேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பலவற்றை எடுத்துரைக்கலாமாயினும்.... ஒன்றை மட்டும் இங்கு கூறவிழைகின்றேன். **சிறுவர்களுக்கேற்ற விதத்தில் எளிதான உவமைகளை உதாரணங்களை அநாயாசமாகக் கையாண்டு வலுவான சிந்தனைகளை இலகுவாக வெளிப்படுத்துகின்ற ஆற்றல் இக்கவிஞரிடம் நிரம்பவுண்டு.**

உ+ம் - 1

ஓடுகின்ற பஸ்சை விட்டால்
வேறு ஒன்று உண்டு!
உருண்டு ஓடும் காலமதை
தவறவிட்டால் போச்சு.

உ+ம் - 2

அடுத்தவனை எதிர்பார்த்து
அடுக்களைப் பூனையென
படுத்துறங்கிக் கொண்டவனோ
படுந்துயரில் மீண்டதில்லை.

இறுதியாக ஒன்று, ஈழத்துச் சிறுவர் பாடலாசிரியர்களுள் முக்கியமான ஒருவர் வித்துவான் வேந்தனார். அவரிடம் கல்விகற்ற இக்கவிஞர் குருவை மிஞ்சும் சீடனாக வேண்டும் என்பது எனது வேண்டுதல்... என்னாசையையும் என்போன்ற பிறரது ஆசையையும் கவிஞர் பூர்த்தி செய்வாரென்று நம்புகின்றேன். அதற்கான ஆற்றல் இவரிடம் இருக்கின்றதென்பதில் ஐயமே இல்லை!


வாழ்த்துக்களுடன்
**பேராசிரியர் செ.யோகராசா**
கிழக்குப் பல்கலைக்கழகம்.
வந்தாறுமூலை

17-01-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**த**மிழில் 'சிறுவர்' என்ற சொல் வழக்கத்தில் வருமுன்னர் 'பிள்ளை' என்ற சொல்லே வழக்கத்தில் இருந்தது. 'பிள்ளைத் தமிழ்' என்ற இலக்கிய வகை தமிழில் அறிமுகமாவதற்கு இச்சொல்லே காரணமாக அமைந்தது. இப்போது இவ்வகை இலக்கியம் 'சிறுவர் இலக்கியம்' எனப்படுகிறது. அந்த வகையில் அன்பு கெழுமிய எனது இலக்கிய நண்பரும் - *1990* இல் திருகோணமலையில் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில் எனது சக ஊழியருமான கவிஞர் ஷெல்லிதாசன் (கனகரத்தினம்) அவர்களின் 'வண்ண வண்ண பூக்கள்' எனும் இவ் சிறுவர் பாடல் தொகுதி, சிறுவர் இலக்கியத்தில் ஒரு புதிய வரவு ஆகும்.

நூலின் தலைப்பே சிறுவர் இலக்கியம் என்பதற்குப் பொருத்தமாக அமைந்துள்ளது. சிறுவர்களுக்கான வண்ண வண்ண பாக்கள் அமைந்துள்ள இத்தொகுதிக்கு **'வண்ண வண்ணப் பூக்கள்'** என்ற தலைப்பு மகா பொருத்தமானதே.

சிறுவர் பாடல்கள் சிறுவர்களின் உளவியலோடு சம்பந்தப் பட்டவை. சிறுவர் பாடல்கள் தரும் அறிவூட்டல்கள் பசுமரத்தாணிபோல் சிறுவர்களின் உள்ளங்களில் பதிய வேண்டும்.

அதற்கு எளிய - இயல்பான - மொழிப்பிரயோகம் அவசியம். சிறுவர்களுடைய மனதை ஈர்த்து அவர்களை மகிழ்ச்சி கொள்ளத் தூண்டும் ஓசைநயம் - சந்தம் அவசியம். இவ்விரண்டு அவசியமான அம்சங்களும் இந்நூலிலுள்ள பாடல்களில் இளையோடிக்கிடப்பது சிலாகிக்கத்தக்கது.

இத்தொகுதியிலுள்ள ஒவ்வொரு பாடலும் ஒன்றையொன்று விஞ்சும் படியாக விளங்குவது நூலாசிரியரின் ஆழ்ந்த மொழிப் புலமைக்கும் கவியுள்ளத்திற்கும் கட்டியம் கூறுகின்றது.

ஒரு சிறுவனின் ஆளுமை விருத்திக்குத் தேவையான குடும்பப் பிணைப்பும் பொறுப்பும் - நல்லபழக்க வழக்கங்கள் படிப்பில் கவனம் - அன்னை மீதான அன்பு - நல்லுணர்வு ஜீவராசிகளின் மீதான அன்பும் கரிசனையும் - பகுத்தறிவுச் சிந்தனை - உடலுழைப்பு - கல்வி, நற்பண்பு, சுகாதார பழக்கவழக்கங்கள், வாழ்க்கை மீதான நம்பிக்கை - விளையாட்டு மனிதநேயம் மற்றவர்களை மதிக்கும் பண்பு - தாய்மொழிப்பற்று -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரை மதித்தல் - பெற்றோர் மீதான பாசம் பெற்றோருக்கு உதவுதல் வாசிப்பின் அவசியம் போன்ற விடயங்களையெல்லாம் அறிவூட்டற்பாணியில் அழகிய கவிதைகளாக இந்நூலில் அள்ளிவழங்குகிறார் ஷெல்லிதாசன் அவர்கள்.

மகாகவி பாரதியின் **'ஓடி விளையாடு பாப்பா.....'** தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவரின் **'ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை'** திரைப்பட பாடலாசிரியர் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் **'சின்னப் பயலே சின்னப்பயலே சேதி கேளடா.....'** போன்ற பாடல்களுக்கு நிகரான பல பாடல்கள் இந்நூல் தோட்டத்தில் **'வண்ண வண்ண பூக்கள்'** ஆகப் பூத்துக் குலுங்குகின்றன.

மேலும், சிறுவர் இலக்கியம் மேற்குலக நாடுகளிலும், இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் வளர்ச்சி பெற்றிருக்கும் அளவுக்கு ஈழத்தில் இல்லை. இங்கு சிறுவர் இலக்கிய படைப்பாளிகளும் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றனர்.

விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியினால் ஏற்பட்ட தொலைக்காட்சி போன்ற பொழுது போக்குச் சாதனங்களும், தகவல் தொழில் நுட்பத்தின் அதீத வளர்ச்சியினால் ஏற்பட்ட இணையத்தளப் பிரயோகங்களும் இக்காலச் சிறுவர்களின் மனதை ஆக்கிரமித்து அவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தைக் குன்றிப் போகச்செய்துள்ள இக்காலச் சூழலில் சிறுவர்களைக் கவரும் வண்ணம் சிறுவர்களை வாசிக்கத் தூண்டும் வண்ணம் சிறுவர்களுக்காகவும் - சிறுவர்களை வழி நடத்தும் பெரியோர்களுக்கான இலகு தமிழ் நூலாகவும் படைக்கப்பட்டுள்ள இந்நூலின் வரவு இன்றைய தமிழ்ச் சூழலில் மிக முக்கியமான பதிவு ஆகும்.

நூலாசிரியரை மனமகிழ்ந்து பாராட்டுவதுடன் பல படைப்புக் களைத் தரவும் வாழ்த்துகின்றேன்.

செங்கதிரோன்
**த.கோபாலகிருஷ்ணன்**
ஆசிரியர் 'செங்கதிர்'

607, பார்வீதி
மட்டக்களப்பு.
15.12.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணங்களும் என் எண்ணங்களும்

**பூக்களே**
**உங்கள் புன்னகையின் மோகனத்தில்**
**நான் இலயிக்கின்றேன்.**
**மனித புன்னகையின் மறுபக்கத்தில்**
**வஞ்சனையின் வாடை அடிப்பதனால்**
**விடியற் பொழுதில்**
**உங்கள் தூய புன்னகையில்**
**நான் கண் விழிக்கின்றேன்.**

'செம்மாதுளம்பூ' எனும் எனது கவிதை நூலில் இடம் பெற்ற கவிதையொன்றின் சில வரிகள் தான் இவை. அந்தப் பூக்களைப் போன்றதோர் அழகும், மென்மையும், கள்ளங்கபடமற்ற தன்மையும் கொண்டவர்கள் தான் மழலைகள்.

மலர்களை எவ்வளவு வாஞ்சையுடன் நான் நேசிக்கின்றேனோ, அந்த அளவிற்கு மழலைகளையும் என் உள்ளம் நேசிக்கின்றது.

எனவே அந்த மழலைகளை, சிறுவர்களை மகிமைப்படுத்தவும், வழிப்படுத்தவும் வேண்டி இந்த '**வண்ண வண்ண பூக்கள்**' பல்வேறுபட்ட பாக்களாக முகிழ்த்து முகங்காட்டி சிரிக்கின்றது என்றால் மிகையாகாது.

கவிதைகளை, மெல்லிசைப்பாடல்களை எழுதுவதற்கு எப்படி எனக்கு ஒரு பின்னணி உந்து சக்தியாக அமைந்ததோ, அதே போன்று சிறுவர் பாடல்களை நான் ஆக்குவதற்கும் ஓர் உந்து சக்தி பின்னணியாக அமைந்தது.

எனது பள்ளிப் பருவத்தில் தமிழ் மொழியை, இலக்கியத்தை ஆர்வத்துடன் நான் பயில்வதற்கு ஏற்றதோர் ஆசானாக அமைந்த **வித்துவான் க.வேந்தனார்** அவர்களே சிறுவர் பாடல்களை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றுவதற்கோர் உந்துசக்தியாகத் திகழ்ந்தார் என்பதை இங்கு நான் பெருமையுடன் குறிப்பிடுவதில் மகிழ்வடைகின்றேன்.

நாம் வித்துவான் அவர்களிடம் மொழிக் கல்வியை பயின்ற வேளையிலேயே பல சிறுவர் பாடல்களை அவர் இயற்றியதுடன் அவற்றை அவ்வப்போது 'சுடச் சுட' இன் தமிழில், சந்தங்கள் இழையோட தனது கம்பீரமான குரலில் எமக்குப் பாடிக்காட்டி மகிழ்ந்த அந்தக் காலவேளையானது இன்றும் என்னுள்ளத்தே பசுமை நினைவுகளாக வலம்வருகின்றது. அவரது அருமையான சிறுவர் பாடல்கள் அன்று தந்த அருட்டுணர்வே இன்று என்னையும் சிறுவர் பாடல்களின் பால் திசைதிருப்பியது.

அவ்வப்போது நான் பல சிறுவர் பாடல்களை எழுதிவந்தேன். அவற்றுள் சில வற்றை வானொலிக்கும் அனுப்பிவைத்தேன். அப்படி அனுப்பி வைத்த பாடல்களுள் '**புதுரோஜா மலரே**' '**வளரும் பிறையே இளங்கதிரே**' போன்ற பாடல்கள் பிரபல இசை மேதைகளால் இசையமைக்கப்பட்டு வானலையில் மிதந்து பலரது பாராட்டுக்களையும் பெற்றதுடன், இற்றைவரை அவை வானொலியில் ஒலித்த வண்ணமிருப்பது எனது சிறுவர் பாடல் ஆக்கத்துக்குக் கிடைத்ததோர் வெற்றி என்றே நான் கருதுகின்றேன்.

அதே போன்று ஏனைய எனது சிறுவர்பாடல்களை உள்ளடக்கிய தொகுப்பாக இந்த 'வண்ண வண்ணப் பூக்கள்' உங்கள் கரங்களில் பூத்துச்சிரிக்கின்றது. அதற்கான பேராதரவை நீங்கள் நிச்சயம் எனக்கு வழங்குவீர்களென எதிர்ப்பார்க்கின்றேன்.

இந்த 'வண்ண வண்ணப் பூக்களை' என் எண்ணப்படி சிறந்த வடிவமைப்புடனும், உயிர் வண்ண ஓவியங்களுடனும் வெளிவர முனைப்புடன் செயற்பட்டவர் இதன் வெளியீட்டாளராக திகழும் '**மகுடம்**' **ஆசிரியரும், கவிஞருமான மைக்கல் கொலின்** என்றால் மிகையாகாது. அந்த வகையில் எனது முதல் நன்றி அவருக்கே உரித்தாகின்றது.

இந்நூலுக்கான நயவுரையை சிரமம் பாராது எழுதி நல்கியதுடன், இதில் இடம் பொற்றுள்ள பாடல்கள் பற்றிய அபிப்பிராயங்களை முன்வைத்து அவற்றை திருத்தி அமைப்பதற்கான ஆலோசனைகளையும் வழங்கிய மதிப்பிற்குரிய **பேராசிரியர் செ.யோகராசா** அவர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போன்று, இந்நூலுக்கான அணிந்துரையை சிறந்த முறையில் எழுதி வழங்கியதுடன் எனது எழுத்து முயற்சிகளுக்கு அவ்வப்போது ஊக்கமளித்து, தனது 'செங்கதிர்' சிற்றிதழில் பிரசுரித்து ஆதரவு நல்கி வரும் **செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்** அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

மேலும், இந்நூலில் இடம் பெற்றுள்ள வண்ண ஓவியங்களுடன், அட்டைப்பட ஓவியத்தையும் வரைந்து உதவிய 'மகுடம்' ஓவியர் **திரு.கோ.கைலாசநாதன்** அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள கவிதைகளை கணனி மயப்படுத்த உதவியவர்களான **திருமதி. ரதீபா இளஞ்செழியன், திருமதி. உதயசாந்தி இளங்கோ,** இது சார்பான ஆலோசனைகளை வழங்கிய மகன். K. **தீபகாந்தன்** ஆகியோருக்கும், இந்நூல் வெளிவர பெருமுனைப்புடன் செயலாற்றிய **திரு.சோ.வரதராஜன், திருமதி.மணிமேகலை வரதராஜன்** ஆகியோருக்கும் எனது மனமுவந்த நன்றிகள்.

அத்துடன் இந்நூல் சார்பான தனது கருத்துக்களை முன்வைத்து நெறிப்படுத்திய எழுத்தாளரும், தோழருமான **நந்தினி சேவியர்** அவர்களையும் இங்கு நான் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள கவிதைகளை அவ்வப்போது பிரசுரித்து களமமைத்துக் கொடுத்த **வீரகேசரி, சுடர்ஒளி, தினகரன்** ஆகிய வார வெளியீடுகளின் ஆசிரியர்களுக்கும், **தென்றல் (சிற்றிதழ்)** ஆசிரியருக்கும் எனது நன்றிகள்.

இந்த 'வண்ண வண்ணப் பூக்கள்' பலரது எண்ணங்களையும் கவருவதற்கு ஏற்ற வகையில் பிரசுரித்து உதவிய **வணசிங்கா அச்சக உரிமையாளர், ஊழியர்கள்** அனைவருக்கும் எனது நன்றிகளை கூறி என் எண்ணங்களை இனிது நிறைவு செய்கின்றேன்.

அன்புடன்
**ஷெல்லிதாசன்**
*22.07.2015.*

*B-5*, அரச விடுதி
3ம் கட்டை, உப்புவெளி
திருகோணமலை.
தொ.பே.இல. *026 490 0648*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மாண்பு தரும் கல்வி | 1 |
| 2. | பலூான் சிறுவன் பாடல் | 3 |
| 3. | தூங்காத சின்ன முயல்! | 5 |
| 4. | எல்லாமே நீ தான் அம்மா | 6 |
| 5. | பாற் கஞ்சி | 7 |
| 6. | வண்ண வண்ணப் பூக்கள் | 9 |
| 7. | சின்னக் கண்மணி! | 11 |
| 8. | பள்ளிப் பருவம் | 12 |
| 9. | ஈடில்லா என் அன்னை | 13 |
| 10. | விடிகாலை விழிப்பு | 15 |
| 11. | அன்பான அண்ணன் தம்பி | 16 |
| 12. | சுகந்தரும் சுத்தம்! | 17 |
| 13. | வீட்டில் ஒரு தோட்டம் | 18 |
| 14. | கைத்தொலைபேசி | 19 |
| 15. | கரணம் போடும் குரங்குக் குட்டி | 21 |
| 16. | மகத்துவமானது வாசிப்பு | 23 |
| 17. | தாய்மொழிக் கல்வி! | 24 |
| 18. | ஆடுவோம் பள்ளுப் பாடுவோம்! | 25 |
| 19. | சுவை மாங்கனிகள் | 26 |
| 20. | அம்மாவின் ஆசை! | 27 |
| 21. | பச்சைக் கிளியும் பள்ளிச் சிறுவனும் | 28 |
| 22. | நல்லோராய் நாம் | 29 |
| 23. | தன்னை நம்பும் சின்னக் குருவி | 31 |
| 24. | கைகொடுக்கும் கற்பகதரு | 32 |
| 25. | மதிக்கக் கற்று மதிப்பை உனதாக்கு | 33 |
| 26. | பாரதியின் உறவுக் குயில்! | 34 |
| 27. | ஓடி விளையாடு தம்பி | 35 |
| 28. | முக்குளித்து முத்தெடுப்போம் | 36 |
| 29. | கள்ள நரி குள்ள நரி | 37 |
| 30. | மாற்றுத் திறன் மகிமை ! | 38 |
| 31. | தங்கத்தாத்தா அழைக்கிறார் | 39 |
| 32. | வளரிளம் பருவம் | 40 |
| 33. | அம்மாவுக்கு உதவலாம் வா | 41 |
| 34. | சின்னத்தம்பியின் செல்லக் குறும்பு | 42 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியின் பிற நூல்கள்

⌘ செம்மாதுளம்பூ (கவிதை நூல்) 2010
நீங்களும் எழுதலாம் வெளியீடு

⌘ நகர வீதிகளில் நதிப்பிரவாகம் (கவிதை நூல்) 2013
ஜீவ நதி வெளியீடு

**வெளி வரவிருப்பவை**

⌘ ஷெல்லிதாசனின்
இலங்கை வானொலி மெல்லிசைப் பாடல்கள் (இறுவட்டு)

⌘ ஷெல்லிதாசன் சிறுகதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்பு தரும் கல்வி

கல்வி நல்ல கல்வி - நாம்
கற்போம் சென்று பள்ளி.

அறிவுக் கண்ணைத் திறக்கும்
ஆற்றல் தன்னை வளர்க்கும்
பெருமை அனைத்தும் கொடுக்கும்
பெரியோராக உயர்த்தும்
(கல்வி நல்ல.....)


உண்மை பொய்யை உணர்த்தும்
உலகை அறிய உதவும்
விண்ணை அளக்க துணியும்
வியக்கும் செயல்க ளாற்றும்.
(கல்வி நல்ல.....)

விளங்கும் மனிதம் வளர்க்கும்
விலங்குத் தன்மை ஒழிக்கும்
துலங்கும் ஒளியை வழங்கி
துன்ப இருளை அகற்றும்.
(கல்வி நல்ல.....)

நல்ல பண்பை வளர்க்க - நாம்
நாடு போற்ற வாழ
கல்வி என்னும் சுடரை
கையில் ஏந்தி நடப்போம்!
(கல்வி நல்ல.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலூன் சிறுவன் பாடல்

கடற்கரையில் பலூன் விற்கும்
சிறுவன் நானுங்கோ
கவலை எனக்கு நிறையவுண்டு
சொல்றேன் கேளுங்கோ!

பள்ளி செல்ல நான்நினைத்தும்
போக முடியல்லே
படிக்க நானும் ஆசைப்பட்டும்
பலனும் கிடைக்கல்லே!

குடித்துவிட்டு எங்களப்பா
ஊரைச் சுற்றுறார்
குடிக்கக் காசு வேணுமென்று
என்னை அடிக்கிறார்!

தம்பி தங்கை இருவருக்கும்
நானே மூத்தவன்
நம்பி எனது உழைப்பினாலே
அவர்கள் வாழுறார்.

அம்மா பாவம் அப்பாவிடம்
அடியை வாங்கியே
அகலாத நோயில் வீழ்ந்து
பாயிற் கிடக்கிறாள்!

என்ன செய்ய பலூன் விற்றே
எங்கள் சீவியம்
இரண்டு மூன்று பலூனாய் வாங்கி
உதவி செய்யுங்கோ - ஐயா
உதவி செய்யுங்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்காத சின்ன முயல் !

துள்ளித் துள்ளி ஓடுகின்ற
முயலும் நானே
தொல்லை யேதும் செய்யாத
முயலும் நானே
கள்ள மில்லா மனசுகொண்ட
முயலும் நானே
காடும் மேடும் பாய்ந்து செல்லும்
முயலும் நானே.

புல்லுத் தளிர் உண்ணுகின்ற
முயலும் நானே
பூனை போல எலியையுண்ண
மாட்டேன் நானே
பஞ்சு போன்ற என்னுடலைக்
கொன்று தின்னும்
பாதகத்தைச் செய்ய வேண்டாம்
பாவம் நானே.

ஆமையோடு போட்டி போட்டு
தூங்கித் தோற்ற - என்
அண்ணனுக்காய் வருந்து கின்ற
தம்பி நானே
சிங்கத்தையும் வெற்றி கொள்ளும்
புத்தி உள்ள - என்னை
சேர்த்து நீங்கள் விளையாட
வேண்டுந் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே நீ தான் அம்மா

அரபு நாடு போக வேண்டாம்
எங்கள் அம்மா - நீங்கள்
அருகில் நித்தம் இருக்க வேண்டும்
அம்மா அம்மா.

வெளி நாடு போக வேண்டாம்
எங்கள் அம்மா - நீங்கள்
வீட்டில் எம்மோ டிருக்கவேண்டும்
அம்மா அம்மா.

அநாதை களாய் போய் விடுவோம்
எங்கள் அம்மா - உங்கள்
ஆதரவு இல்லை யெனில்
அம்மா அம்மா.

கல்வி யெல்லாம் பாழாகும்
எங்கள் அம்மா - நீங்கள்
கவனி யாது பறந்து சென்றால்
அம்மா அம்மா.

பணமிருந்தால் நல்லது தான்
எங்கள் அம்மா - அது
பாசம் அன்பை பொழிந்திடுமோ
அம்மா அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாற் கஞ்சி

அம்மா செய்வாள் பாற்கஞ்சி
ஆகா அமுதம் அதுவன்றோ
பருக பருக கற்கண்டுப்
பாகாய் சுவைக்கும் பாற்கஞ்சி!

சிவத்தைப் பச்சை அரிசிக்குள்
சிவக்க வறுத்த பயறிட்டு
நீரை அளவாய் விட்டவித்து
நிறைய பாலும் அதில் விடுவாள்.

கணக்காய் உப்பும் அதிற் சேர்த்து
காய்ச்சி எடுக்கும் பாற்கஞ்சி
அம்மா செய்தால் மட்டுமே
ஆகா ஓகோ எனச்சுவைக்கும்

ஏழை குடிக்கும் கஞ்சியென
இதனை எண்ணிச் சிரிக்காதே
ஊட்டச் சத்தும் உடன் செமிக்கும்
உயர்ந்த உணவே பாற்கஞ்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ண வண்ணப் பூக்கள்

எத்தனை வண்ண மலர்களடி
எமக்காய் பூத்துக் கிடக்குதுபார்
இயற்கை அன்னை அவள் போல
இனிய இதயம் யார்க்கு வரும்.

சிவப்பு மஞ்சள் ஊதாவும்
உவப்பாய் ரோஜா வெண்மை நிறம்
கண்ணைப் பறிக்கும் நீலமுமாய்
காணும் பூக்களோ ஏராளம்.


ஒவ்வோர் பூவும் வெவ்வேறாய்
உருவம் கொண்டு மலர்ந்திருக்கும்
அத்தனை மலர்களும் தனித்தனியே
அருமை வாசனை கொண்டிலங்கும்.

கொடியில் பூக்கும் சில மலர்கள்
கொம்பில் பூக்கும் சில பூக்கள்
செடியில் சிரிக்கும் சிலவகைகள் - சில
சிந்தை கவரும் நீர்நிலையில்.

மலர்போல் நாமும் எந்நாளும்
மகிழ்வாய் இருக்கத் தெரிந்திடுவோம்.
உலரும் வரைக்கும் மணம்வீசி
உயர்வாய் வாழ மனங்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னக் கண்மணி!

உன்சிரிப்பை கண்ட பின்னே
ஓர் அழகும் ரசிக்க வில்லை - உன்
கன்னல் மொழி கேட்ட பின்னே
தேனும் கூட இனிக்க வில்லை
(உன் சிரிப்பை)

நீ பிறந்த அன்றே தான்
நான் பிறந்தேன் தாயாக - நான்
ஏன் பிறந்தேன் என்ப தற்கு
ஏற்ற அர்த்தம் தந்தவள் நீ.
(உன் சிரிப்பை)

வான மென்ற என்வாழ்வில்
வந்து தித்த வெண்ணிலவே - நீ
வந்த பின்னால் தானேயடி
வந்த தொரு வாழ்க்கையடி.
( உன் சிரிப்பை)

ஆனான இன்பம் எல்லாம்
ஆகி வர வந்தவளே - நீ
**நீயாக தலை நிமிர்ந்து**
**வாழ வேண்டும் என்மகளே.**
(உன் சிரிப்பை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிப் பருவம்

பாட நூல்கள் பல சுமந்து
பள்ளி செல்லும் மாணவனே
நேற்றுப் படித்தது நினைவிருக்கா
நினைவில் நின்றால் வெற்றியடா

பள்ளி சென்று நீ நித்தம்
படிக்கும் புதிய பாடங்களை
அன்று இரவே நீ மீட்டால்
அதுவே உனக்கு கைகொடுக்கும்.

பரீட்சை வந்த பின்னாலே
படிப்போம் என்று உறங்காதே
நன்றாய் படிக்க நினைத்தாலும்
ஒன்றும் புரியாது அவ்வேளை!

கல்வி யொன்றே பெருஞ்செல்வம்
கற்றல் தானே உன்வேலை
பள்ளிப்பருவம் மறையுமுன்பே
படிப்பில் கவனம் நீ செலுத்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடில்லா என் அன்னை

அம்மா அம்மா என் அம்மா
அன்பாய் அணைக்கும் என் அம்மா
தன்பா லமுதம் தந்தென்னை
தெம்பாய் வளர்த்த தெய்வ மவள்!

தனது உடலின் அழகெல்லாம்
தளர்ந்து அழிந்தே போனாலும்
என்பாற் கொண்ட பாசத்தால்
எதையும் இழப்பாள் என் அன்னை.


ஆயா ஊட்ட அவளிருந்து
அழகாய் தொடர்கள் பார்த்ததில்லை
அப்பா வுடனே ஊர்சுற்றி
அழவும் தனியே விட்டதில்லை.

விரும்பும் பண்டம் அத்தனையும்
வீட்டிலேயே அவள் செய்வாள்
எதையும் தெருவில் வாங்கியுண்ண
எங்க ளம்மா விட்டதில்லை.

அன்னை யென்றால் எல்லோர்க்கும்
அன்பு அன்னை வாய்ப்பதில்லை
என்னைப் பெற்ற அன்னைக்கு
ஈடாய் எவர்தான் வருவாரோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிகாலை விழிப்பு

உதயப் பொழுதில் நீயெழுந்தால்
உற்சாக மாகவே இருந்திடலாம்
நேரம் கடந்து விழித்தெழுந்தால்
நிழலாய் தொடரும் சோம்பல்தான்.

காலைப் படிப்பே என்றென்றும்
கல்லில் எழுத்தாய் நிலைநிற்கும்
வேளை எழுந்து கற்றோரே
வெற்றி பெற்றார் வாழ்க்கையிலே.

இயற்கை யெல்லாம் அதிகாலை
எழுச்சி பெற்று திகழ்கையிலே
உறங்கிக் கிடந்தால் உன் வாழ்வும்
உறங்கிப் போகும் அறிவாயா!

சிறுவர் நாங்கள் சுறுசுறுப்பாய்
செய்யும் முயற்சிகள் தோற்பதில்லை
எனவே எழுவோம் விடிகாலை
இன்ப வாழ்வை எமதாக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான அண்ணன் தம்பி

எனதருமைச் சின்னத் தம்பி
எனத ருகே வாவா
இரண்டு பேரும் ஒன்று சேர்ந்து
விளையாடலாம் வாவா.

அண்ணன் எனக்கு நீயேயொரு
தம்பி யடா தம்பி
ஆசை யோடு விளையாடி
மகிழ்ந்தி டலாம் வாவா.

வளர்ந்து வந்தால் நானுனக்கு
சட்டை வாங்கித் தருவேன்
வடிவான சப்பாத்தும் பொம்மைகளும்
வாங்கி நிறையத் தருவேன்.

எப்பொழுதும் நாங்கள் மிக்க
பாசத்தோடு இருப்போம்
இனிய நல்ல சகோதரர்கள்
என்ற பெயரும் எடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகந்தரும் சுத்தம் !

நீடித்த வாழ்வு தரும் சுத்தம்
நிம்மதியை தருவதுவும் சுத்தம்
ஓடி மருத்துவரை நாடும்
உடல் நோயை தடுப்பதுவும் சுத்தம்.

வாழ்விலே ஒளியேற்றும் சுத்தம்
வையகத்தை வாழ வைக்கும் சுத்தம்
தாழ்வு மனப்பான்மை அகற்றி
தலைநிமிர வைப்பதுவும் சுத்தம்.

மதிப்பைத் தருவதுவும் சுத்தம்
மனதிலின்பம் மலரவைக்கும் சுத்தம்
தெய்வீகத் தன்மை தரும் சுத்தம்.
திறமைக்கும் கை கொடுக்கும் சுத்தம்.

சுற்றாடல் தனைப் பேணிக் காப்போம்
சுகாதார வழிமுறையில் நடப்போம்
எப்போதும் தூய்மைதனைப் பேணி
இவ்வுலகில் நல்வாழ்வு காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில் ஒரு தோட்டம்

வீணாய் கிடக்கும் நிலத்தினிலே
வீட்டுத் தோட்டம் நாம் செய்வோம்
நாலு பயிர்கள் நாம் நட்டால்
நாளும் நல்ல பயன் தருமே!

கத்தரி வெண்டி தக்காளி
கறிவேப் பிலையும் அகத்தியும்
நட்டு வளர்த்து நாளாந்தம்
நன்றாய் அவற்றைப் பராமரிப்போம்!

அம்மா அரைக்கும் சம்பலுக்கு
ஐந்து ஆறு மிளகாயை
எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
இருந்து பெற்றால் ஆனந்தம்.

ஆனை விலைக்கு மரக்கறிகள்
ஆகிப் போகும் வேளையிலே
நாலு பயிர்கள் நாம் நட்டால்
நாளும் கலங்கத் தேவையில்லை.

பள்ளிப் பருவ நாள்முதலாய்
பாடு பட்டு நாமுழைத்தால்
எந்தத் துன்பம் வந்தாலும்
எல்லாம் தூசாய் மாறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசி

பள்ளி செல்லும் எங்களுக்கு
கையில் ஏனோ தொலைபேசி
உய்யும் வகையை அதுகெடுக்கும்
ஒன்றாய் இருந்தே தொல்லைதரும்!

படிக்க வைக்கும் பெற்றோர்க்கு
பலவித செலவில் இதுவொன்று
எதற்கு எமக்குத் தொலைபேசி
எடுத்து வீசி அதை எறிவோம்!

பாடம் நடக்கும் வேளையிலே
பதுங்கி இருந்து கதைப்பதினால்
காலந் தானே வீணாகும்
கல்வி எல்லாம் பாழாகும்!

தெருவில் நடந்து தொலைபேசி
தினமும் பேசும் பழக்கத்தால்
ஒருநாள் விபத்தில் அகப்பட்டு
உயிரை இழக்க நேரிடலாம்!

வளர்ந்து நாமும் பெரியவராய்
வந்து படித்துத் தொழில் பார்க்கும்
அந்த வேளை எங்களுக்கு, மிக
அவசிய மானதே தொலைபேசி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரணம் போடும் குரங்குக் குட்டி

**தா**வித் தாவி கனிகளுண்ட
குரங்குக் குட்டி என்னை
தடத்தைப் போட்டு ஒரு மனிதன்
பிடித்து விட்டான் தம்பி!


கூட்டத்தோடு சேர்ந்து வாழ்ந்த
குதூ கலமும் போச்சு - என்
பாட்டன் பாட்டி அம்மாக்களை
பார்த்து நாளும் ஆச்சு!

கம்பெடுத்து அடித்து அடித்து
கரணம் போடச் சொல்வான் - அவன்
கால்வயிறு உண்ணத் தந்து
காசு பணமும் சேர்ப்பான்.

வேடிக்கையாய் என்னைப் பார்க்கும்
சிறுவர்களே எந்தன்
விடுதலைக்கு ஓர் வழியை
வேண்டுகின்றேன் சொல்வீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்துவமானது வாசிப்பு

தேடித் தேடி வாசிப்போம்
தெளிந்த அறிவை நாம் பெறுவோம்
ஓடிப் பொழுதைக் கழிக்காமல்
உயர்ந்த நூல்கள் நாம் படிப்போம்.

உழுது விதைத்த தரையினிலே
உன்னத விளைச்சல் கைகூடும்
எண்ணும் எழுத்தும் வாசிப்பும்
இதுபோல் பயனை எமக்களிக்கும்.

சிந்தனை வளமும் செய்திறனும்
சிறப்பாய் ஞாபக சக்திகளும்
வளர உதவும் வாசிப்பை
வரமாய் ஏற்று செயற்படுவோம்

சிறுவர் எமது மனங்களிலே
சீரிய கருத்தை உருவாக்கும்
அரிய நூல்களை நாம்படித்து
அகிலம் போற்ற வாழ்வோமே.

முழுமை அளிப்பதும் வாசிப்பு
முதன்மை யானதும் வாசிப்பு
இனிமை நிறைந்த பண்புகளை
எமக்குள் வளர்ப்பதும் வாசிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழிக் கல்வி!

அன்னை மொழியில் கற்றிடுவோம் - நல்
அறிவை நாங்கள் பெற்றிடுவோம்
எம்மை நாங்கள் அறிவதற்கு
ஏற்ற மொழியே தாய்மொழிதான்.

எமது மொழியை நாம் இகழ்ந்தால்
எவர்தான் அதனை ஏற்றிடுவார்
தம்மை நம்பி வாழ்பவர்க்கு
தாய்மொழிக் கல்வியே துணையாகும்.

கற்கும் போது தெளிவாக
கற்கச் சிறந்தது தாய்மொழிதான்
மற்றோர் மொழியிற் கற்பதனால்
மனதில் எதுவும் பதிவதில்லை.

தாய்மொழி யோடு பிறமொழியும்
தயக்க மின்றிக் கற்போம் நாம்
நால்வகை மொழியைக் கற்றாலும்
நமது மொழியை மதித்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுவோம் பள்ளுப் பாடுவோம்!

சின்னச் சின்ன வீடுகட்டி
சேர்ந்து விளையாடு வோம்வா
வண்ண வண்ண ஆடைகட்டி
வட்டமிட்டு ஆடுவோம் வா. (சின்னச் சின்ன...)

பாட்டுச் சொல்லி எமக்குத்தர
பூங்குயிலே நீயும் வாவா
நாட்டியமும் நாம் பயில
தோகை மயில் நீயும் வாவா (சின்னச் சின்ன..)

பூங்குருவி பூங்குருவி
பூக்கள் சூடி நாம் மகிழ
புத்தம் புது மல்லிகைப்பூ
தேடி வந்து நீ தருவாய். (சின்னச் சின்ன)

வெண்ணிலவே வெண்ணிலவே
விண்ணில் வலம் வரும் நிலவே
எம்முடனே நீயும் கூடி
சேர்ந்து விளையாடலாம் வாவா (சின்னச் சின்ன)

முத்துச் சரம் போல மின்னும்
நட்சத்திரக் கூட்டங் களே
வைரமணி மாலை கட்டி
வந்தெமக்குத் தந்தா லென்ன?
(சின்னச் சின்ன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவை மாங்கனிகள்

மாங்கனிகள் நல்ல மாங்கனிகள்
மணத்துடனே சுவைநிறைந்த மாங்கனிகள்
இனத்தினிலே பலநூறு வகைவகையாய்
இருக்குதுபார் எங்களூரில் மாங்கனிகள்

அம்பலவி செம்பட்டான் கருத்தைக்கொழும்பான்
அருமையான கிளிச்சொண்டன் விலாட்டு என்றும்
விதவிதமாய் எங்களூரில் மாங்கனிகள்
வேண்டுமட்டும் வாங்கிடலாம் விரைந்தேவா நீ!

மரத்தினிலே உடன்பறித்த சுவைக்கனிகள்
மருந்தேதும் அடிக்காத புதுக்கனிகள்
திகட்டாத தேனமுதக் கனிகளை நீ
தினந்தோறும் உண்டுவந்தால் தேகம்மின்னும்!

வீட்டுக்கொரு மாமரமும் நாட்டிடுவோம்
விலைகொடுத்து வாங்குவதை நிறுத்திடுவோம்
முன்னோர்கள் நட்டுவைத்துச் சென்றமரம்
பின்னோராம் எமக்குக்கனி தருவதைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் ஆசை!

**மெ**ல்லத் தவழும் பொம்முக்குட்டி
போல வருகின்றாய் - பாப்பா
மேனி தழுவி முத்தந்தந்து
அமுதம் பொழிகின்றாய்.

அல்லி மலரோ ரோஜாப் பூவோ
உந்தன் மேனியடி - பாப்பா
அழகுத் தேராய் அசைந்து நீயும்
வாடி என் கண்ணே.

இயற்கை படைத்த தங்கநிலவே
எந்தன் ஆருயிரே - எனக்கு
ஈடே யில்லா தாய்மையென்ற
வரத்தை அளித்தவளே.

நாடே போற்றும் பெண்ணாய் நீயும்
வளர வேண்டுமடி - இந்த
**நாட்டின் விதியை மாற்றியெழுதி**
**மீட்சி தருவாயடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சைக் கிளியும் பள்ளிச் சிறுவனும்

பச்சை நிற சிவத்தைச் சொண்டுக் - கிளியாரே
பயப்படாமல் அருகே வாரும் - கிளியாரே
அழகான கூடிருக்கு - கிளியாரே
ஆற அமர இருக்க லாம் நீர் - கிளியாரே

இனிமை யான பழந்தருவேன் - கிளியாரே
இஷ்டப்படி ருசித் திடலாம் - கிளியாரே
கஷ்டப்பட்டு அலைய வேண்டாம் - கிளியாரே
காலடியில் உணவிருக்கு கிளியாரே

பூனைப்பயம் உமக்கு இல்லை - கிளியாரே
பொழுதிரவு காவ லுண்டு - கிளியாரே
தங்கக் கூட்டில் உம்மை வைத்து - கிளியாரே
பங்கமின்றி நான்வ ளர்ப்பேன் - கிளியாரே

அதுசரிதான் அதுசரிதான் அன்புத்தம்பி
அத்தனையும் நீ தருவாய் எங்கள் தம்பி
சிறகடித்து சுதந்திரமாய் நான்பறக்கும் - அந்த
சிறந்த இன்பம் அதுதருமோ சொல்லு தம்பி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லோராய் நாம்

நல்ல பிள்ளை நல்ல பிள்ளை
நல்ல பிள்ளை யென்று - பிறர்
நம்மைச் சொல்லி பெருமை கொள்ள
நாங்கள் வளர வேண்டும்.

பெற்றவர்கள் மனங்கள் நோக
என்றும் நடக்க மாட்டோம் -வீண்
பெருமை பேசி பொழுது போக்கி
காலம் கழிக்க மாட்டோம்.


நல்ல நண்பர் கூட்டத்தோடு
நாங்கள் சேர வேண்டும் - எம்மை
நாடி வரும் தீயோர் தம்மை
விரட்டி அடிக்க வேண்டும்.

வல்லவராய் கற்றவராய்
வாழ்வில் உயர வேண்டும் -நாம்
வாய்மை உள்ள மனிதர்களாய்
வாழப் பழக வேண்டும்

துன்பத்திலே பிறர்க்கு நாங்கள்
கைகொடுக்க வேண்டும்- என்றும்
இன்பமாக அனைவ ரோடும்
இணைந்து வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை நம்பும் சின்னக் குருவி

சின்னச் சின்ன குருவியைப் பார் – அது
சிறகு அடிக்கும் அழகினைப்பார்
அங்கும் இங்கும் அது பறந்து
அரிய கதைகள் கூறுது பார்.

மரத்திற் பறந்து அது இருக்கும்
மண்ணில் வந்து இரைதேடும்
கணத்தில் காற்றாய் மேலெழுந்து
காணாத் தொலைவில் அது பறக்கும்.

தனது உணவைத் தான் தேடும்
தன்னை நம்பி அதுவாழும்
எவரும் தருவார் என நம்பி
இருக்கா தந்தச் சிறு சிட்டு

நாமும் அது போல் சுறுசுறுப்பாய்
நம்மை நம்பி வாழ்ந்திடுவோம்
வானில் பறக்கும் குருவியைப் போல்
வலமும் வருவோம் பூமியிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகொடுக்கும் கற்பகதரு

**தா**னாய் வளர்ந்து நிலமூன்றி
தண்ணீா் விட்டு வளர்க்காது
உயர்ந்து நிற்கும் பனையைப்பார் - அதன்
உன்னத குணமும் யார்க்குவரும்.

காய்ந்த ஓலை வேலிக்கு
குருத்து ஓலை பாய்க்கடகம்
பச்சை ஓலை கிழித்தெடுத்து
பசுக்கள் வளர்த்துப் பயன்பெறுவோம்.

காய்க்குள் இனிய நுங்கிருக்கும்
கனிக்குள் அமுதக் களியிருக்கும்
களியை பிழிந்து காயவைத்தால்
கடித்துச் சுவைக்க பனாட்டுவரும்.

பாளை சீவக் கள்ளுவரும்
பதனீர் கூட வடித்திடலாம்
அதனை காய்ச்சி நாமெடுத்தால்
ஆகா இனிக்கும் பனங்கட்டி.

விதையும் கிழங்காய் விழுந்துவரும்.
வேக வைத்தால் அது சுவைக்கும்
அவித்த கிழங்கை உலர்த்தவரும்
அருமை யான புழுக்கொடியல்.



பச்சைக் கிழங்கு ஒடியலிலே
பதமாய் கூழுடன் பிட்டவித்து
உண்டால் உடலின் பலம்பெருகும் - இந்த
உண்மை அறிந்து பனைவளர்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிக்கக் கற்று மதிப்பை உண்டாக்கு

ஏழைச் சிறுவனை நீ
ஏளனமும் செய்யாதே
நாளை அவன் வளர்ந்து
நாடு போற்ற வாழ்ந்திடலாம்

வசதியில்லா மாணவனை
வம்புக்கு நீ இழுக்காதே
அவனுக்கும் ரோஷம் வரும்
அவனடித்தால் தாங்காது!

உணவின்றி வாடுகின்ற
உன்வகுப்புத் தோழனிடம்
பணப்பெருமை பேசாதே
பார்த்திருக்க உண்ணாதே!

உன்னை விடப் பாடங்களில்
உயர்புள்ளி அவன் பெற்றால்
பொறாமை தனை வளர்க்காமல்
பொறுமையாய் நீயும் படி!

படிப்பால் உன் மனத்தில்
பண்பினை நீ வளர்த்துக் கொள்
துடிப்பான உன்னிடத்தில்
தோல்வியும் நெருங்காதடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் உறவுக் குயில்!

கூக்கூவென கூவுகின்ற குயிலாரே
கூவியாரை அழைக்கின்றீர் குயிலாரே
அம்மாவையா அழைக்கின்றீர் குயிலாரே
அவளை நீரும் அறிவீரோ குயிலாரே!

அண்ணன் தங்கை யாருமுண்டோ குயிலாரே
அவர்கள் எந்த ஊரிலுள்ளார் குயிலாரே
கூடில்லாத பறவை நீராம் குயிலாரே
கூடுகட்டி நான் தரவா குயிலாரே.

அழகாகப் பாடுகின்ற குயிலாரே
யாரிடம் நீர் பாடம் கற்றீர் குயிலாரே
நானும் சென்று கற்க வேண்டும் குயிலாரே. அவர்
நாடறிந்த வித்துவானோ குயிலாரே

ஊருலகம் வாழப் பாடும் குயிலாரே
உமது குணம் யார்க்கு வரும் குயிலாரே
பாடிப்பாடிக் களித்திருக்கும் குயிலாரே. நம்ம
பாரதிக்கு நீர் உறவா குயிலாரே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடி விளையாடு தம்பி

கூட்டுக்குள்ளே போட்டு வளர்த்த
கோழிக் குஞ்சு போல -நீ
குண்டு குண்டாய் வளருவது
என்று மாறும் தம்பி?

ஓடியாடி விளையாடும்
காலம் மாறிப் போச்சு - நீ
உட்கார்ந்து பொழுது போக்கி
உடம்பு குண்டாய் ஆச்சு

கண்ட கண்ட தீனையுண்டு
தண்ணித் தவளை போலே - நீ
களைப்புடனே நடந்து செல்லும்
காலம் மாற வேண்டும்

பந்தடித்து பாய்ந்து ஓடி
நித்தம் விளையாடு - உன்
படிப்புடனே தேகம் நன்கு
பலம் பெறவும் வேண்டும்

உறுதியான சுவரினிலே
சித்திரமும் வரைவோம்
உடலை நன்கு பராமரித்து
உலகம் போற்ற வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்குளித்து முத்தெடுப்போம்

**சோ**ம்பல் தவிர்த்து எழு
சுறுசுறுப்பை நீ போற்று
ஆம்பலாய் உனது வாழ்வு
அழகாய் தினம் மலரும்

தூங்கி வழிந்து விட்டு
துரதிஸ்ட சாலி யென்று
ஏங்கிக் கிடப்பதிலே
என்றுமே இலாபமில்லை.

கல்வியிலே நாட்டம் கொள்
காலத்தை மதித்து நட
எல்லையில்லா நல்வாழ்வு
என்றுமே உனதாகும்

அடுத்தவனை எதிர்பார்த்து
அடுக்களைப் பூனை யென
படுத்துறங்கிக் கொண்டவனோ
படுந்துயரில் மீண்டதில்லை

**மூழ்கிக் கிடக்கும் முத்து**
**முக்குளித்தால் கைக்கு வரும்**
**ஆழப் புதைந்த வெற்றி, அதை**
**ஆள்வதற்கு முயற்சி யெடு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ள நரி குள்ள நரி

கள்ள நரியார் இவர்
குள்ள நரியார்
கூட இருந்தே நல்லாய்
குழி பறிப்பார்!

சிங்கத்தோடு தோழனுமாய்
கூட்டு அமைப்பார் - அவர்
தின்று விட்ட எச்சிலையே
தேடி ருசிப்பார்.

மந்தையோடு மந்தையாக
சேர்ந்து நடப்பார் - வழி
மாறிவிட்ட குட்டிகளை
மடக்கிப் பிடிப்பார்.

தந்திரத்தில் வல்ல இந்த
குள்ள நரியார் - சில
தருணங்களில் மந்திரியாய்
பதவி வகிப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறன் மகிமை !

**து**ணிவே எங்கள் துணையாகும் - எம்
துயரம் யாவும் பறந்தோடும்
அவயம் எதையும் இழந்தாலும் -நம்
ஆற்றல் என்றும் ஓயாது.
(துணிவே..)

வீழ்ந்து கிடந்தால் எம்வாழ்வு
வீணாய் கண்ணீர்க் கடலாகும்
ஊர்ந்து செல்ல நேர்ந்தாலும்
ஓர்மம் கொண்டு நாமுழைப்போம்
(துணிவே..)

பாலர் நாங்கள் படும் துயர்கள்
பனியாய் முகிலாய் மறைந்தோடும்
காலைக் கதிராய் நாமெழுவோம்
கலக்கம் வேண்டாம் வாருங்கள்
(துணிவே..)

உள்ளம் உறுதி ஆகிவிட்டால்
ஊனம் ஓர்குறை ஆகாது
கள்ள மில்லா பாலகர் நாம்
கல்வி கற்று மேலெழுவோம்
(துணிவே..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தாத்தா அழைக்கிறார்

ஆடிக்கூழ் குடிக்க
ஆசையாக இருக்குது
அப்பப்பா பனங்கட்டி விலை
ஆளை முழுங்க வருகுது.

கூடிக் கூழ் குடிக்க
தங்கத் தாத்தா அழைக்கிறார்
கூழ் குடித்தால் கேவலமாம்
இங்கு சிலர் பழிக்கிறார்!

அம்மாக்கள் சில பேர்க்கு
ஆடிக் கூழைத் தெரியல்லே
அதைச் செய்யும் விதம்கூட
அவர்களுக்கு புரியல்லே!

அழகாக 'கேக்' செய்ய
தெரிந்த அம்மா, எங்களின்
ஆடிக் கூழை, பாரம்பரிய
உணவுகளை மறந்ததேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளரிளம் பருவம்

**பா**ர்த்திருக்க பறந்து விடும்
பருவம் இளைய பருவம் - எமக்கு
பல கடமை காத்திருக்கு
நாளை இந்த உலகில்.

பாப்பாக்களாய் அன்று இருந்த
நாங்க ளின்று சிறுவர் - நாம்
பாயில்மெல்ல தவழ்ந்தி ருந்த
பருவம் மாய மாச்சு.

விரைந்து ஓடும் காலத்தோடு
சேர்ந்து நாமும் செல்வோம்
வித்தைகளை கற்றுத் தேர்ந்து
வெற்றி கண்டு வாழ்வோம்.

**ஓடுகின்ற 'பஸ்சை' விட்டால்**
**வேறு ஒன்று உண்டு**
**உருண்டு ஓடும் காலமதை**
**தவற விட்டால் போச்சு!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவுக்கு உதவலாம் வா

அம்மா பாவம் அடுக்களைக்குள்
நெருப்பு வேகிறாள்
சும்மா நாமும் வம்பு பேசி
சோம்பிக் கிடக்கிறோம்.

வீட்டு வேலை அத்தனையும்
அவளே செய்கிறாள்
வெட்டியாக இருந்து நாமும்
ரி.வி பார்க்கிறோம்

காலை முதல் மாலை வரை
வேலை செய்வதால்
களைத்து அவள் துரும்பாய்
இளைத்துப் போகிறாள்.

வாடா தம்பி அம்மாவுக்கு
உதவி செய்யலாம்
வருந்த விடாமல் முடிந்த வேலை
நாமும் செய்யலாம்.

நாங்கள் மட்டும் சொகுசாயிருக்க
எண்ண லாகுமோ - வீட்டில்
நாலுவேலை நாமும் செய்தால்
என்ன நட்டமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தம்பியின் செல்லக் குறும்பு

சின்னத் தம்பியின் குறும்புகளால்
செய்வ தறியா(து) எங்களம்மா
ஐயோ சிவனே எனக் கத்தி
அழுது நித்தம் புலம்புகிறாள்

குளிக்க அவனைக் கூப்பிட்டால்
கோடி யெல்லாம் சுற்றுகிறான்
அடிக்க அம்மா கம்பெடுத்தால்
அடுத்த வீட்டில் ஒளிக்கின்றான்

கழுவி வைத்த மல்லியிலே
கல்லை மண்ணை கலந்திடுவான்
காய்ச்சி வைத்த பசும்பாலில்
உப்பைப் போட்டு ருசித்திடுவான்.

முகத்துப் பவுடர் கிறீமெடுத்து
முற்றாய் கொட்டி உடம்பெல்லாம்
பூசி மெழுகிப் பொம்மையைப் போல்
புதினம் காட்டி அவன் சிரிப்பான்

தம்பி செய்யும் குறும்புகளைத்
தாங்க முடியா(து) எங்களம்மா
அவனை போட்டு அடித்துவிட்டு
அதற்காய் வருந்தி அழுதிடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பேராசிரியர் செ.யோகராசா**
கிழக்கு பல்கலைக்கழகம்.

**செங்கதிரோன்**
**த.கோபாலகிருஸ்ணன்**
ஆசிரியர் - செங்கதிர்

**வி. மைக்கல்கொலின்**
ஆசிரியர் - மகுடம்

# நூலாசிரியரைப் பற்றி...

சிறுவர்களுக்கேற்ற விதத்தில் எளிதான உவமைகளை உதாரணங்களை அநாயாசமாகக் கையாண்டு வலுவான சிந்தனைகளை இலகுவாக வெளிப்படுத்துகின்ற ஆற்றல் இக்கவிஞரிடம் நிரம்பவுண்டு.

மகாகவி பாரதியின் 'ஓடி விளையாடு பாப்பா....' தங்கத்-தாத்தா சோம சுந்தரப்புலவரின் 'ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை' திரைப்பட பாடலாசிரியர் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் 'சின்னப்பயலே சின்னப் பயலே சேதி கேளடா....' போன்ற பாடல்களுக்கு நிகரான பல பாடல்கள் இந்நூல் தோட்டத்தில் 'வண்ண வண்ண பூக்கள்' ஆகப் பூத்துக் குலுங்குகின்றன.

சிறுவர்களுக்கென தனியான இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்தவர்கள் என்ற வகையில் ஈழத்துப் படைப் பாளர்களுக்கு மிக முக்கிய இடம் உண்டு. அதன் நீட்சி யாக இன்று தன்னையும் ஒரு சிறுவர் இலக்கிய படைப் பாளியாக அடையாளப்படுத்தியிருக்கும் கவிஞர் ஷெல்லி தாசனின் மூன்றாவது வெளியீட்டு முயற்சி இது.

ISBN - 978-955-52563-1-5
978-955-52563-1-5

மகுடம்

**விலை 200/=**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org